வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 1 இன் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையேயான 2010 டிசெம்பர் 16 ஆந் திகதிய 4500402212010110492 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு, காலம் என்பன.

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 1 இன் கடன் உடன்படிக்கைப் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள, கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றம் நெடுஞ்சாலைகள் அமைச்சும் நிறைவேற்று முகவர்கள் ஆகும். செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையாகும். நிர்மாண ஒப்பந்தங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட முன்னுரிமை வீதிகளை அபிவிருத்தி செய்து புனரமைப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைப் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,864 மில்லியனுக்குச் சமமான 169.8 அமெரிக்க டொலர்களாகும். இதில் ரூபா 16,976 மில்லியனுக்குச் சமமான 152.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனம் வழங்குவதற்கு உடன்பாடாகியது. 2010 டிசெம்பர் 29 ஆந் திகதி தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டம் 2013 டிசெம்பர் 29 ஆந் திகதி அதனை பூர்த்தி செய்திருந்த போதும், செயற்திட்டக் காலப்பகுதி 2014 டிசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

--------------------

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

-------------------------------------------------------

### 3.1 நிதிப் பயன்பாடு

--------------------------

மீளாய்வாண்டிற்கான மற்றும் 2014 டிசெம்பர் 31 வரையான வரவு, செலவுத்திட்ட நிதி ஏற்பாடு, மற்றும் நிதிப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் |
| சீடிபீ | 152.8 | 16,976 | 4,315.68 | 27.29 | 3,563.56 | 139.65 | 17,025.17 |
| இலங்கை அரசாங்கம் | 17.0 | 1,888 | 385.93 | - | 385.93 | - | 2,368.95 |
| | 169.8 | 18,864 | 4,701.61 | 27.29 | 3,949.49 | 139.65 | 19,394.12 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 4 மாவட்டங்களில் 8 வீதிகள் புனரமைக்கப்பட்டும் அம்பாந்தோட்டையில் உள்ள சிறிபோபுர சந்தியின் மேம்பாலம் நிர்மாணிக்கப்பட்டும் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பகுதியளவில் முடிவடைந்மிருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தரங் குறைந்த பொருட்களைப் பயன்படுத்தியமையாலும் மழை காலத்தில் வீதி வேலைகளை மேற்கொண்டதாலும் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் 49 + 500 கிலோ மீட்டர் தொடக்கம் 49 + 570 மீட்டர் வரையும் மற்றுமோர் இடத்தில் 51+450 கிலோ மீட்டர் தொடக்கம் 51+638 கிலோ மீட்டர் வரையுமான அஸ்பாலற் பதித்தல், இறுக்கமடையச் செய்தல், ஆரம்பப் பூச்சு மற்றும் வீதி அடையாளமிடல் ஆகியன மூலப்பொருட்களின் இழிவான தரத்தினால் நியமத்திற்கு ஏற்றவாறு அமையாதிருந்தமை. கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட தள பரிசோதனையின் போது புலனாகியது.

(ஆ) அஸ்பாலற் கொங்ரீட் இடலுக்கான நோக்கத்திற்காக ஒப்பந்த ஆவணங்களின் 506.5(i) ஆம் இலக்க தொழில் நுட்ப குறிப்பிற்கமைய, இறுக்கமடையச் செய்த பகுதிகளில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளது செறிவானது மார்ஷல் செறிவின் இன் 98 சதவீதத்திற்குக் குறைவாக இருத்தல் ஆகாது. எவ்வாறாயினும், பெலவத்த – தினியாவல – கன்கொட்டியாவத்த – மொறவக்க வீதியில் 43 இடங்களில் அஸ்பலற் கொங்கிரீட் தேவையான தரத்திற்கு ஏற்ப இறுக்கமடையுமாறு செய்யப்படவில்லை. கொங்கிரீட் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், கொங்கிரீட்டின் பலத்தை அளவிட மேற்கொள்ளப்பட்ட 281 மாதிரிப் பரிசோதனைகளில் 123 மாதிரிகளது தரம் சரிவர இருந்தது. மேலும், பரிசோதனை அறிக்கைகளுக்கமைய, வீதியின் 4 மதகுகளில் கொங்கிரீட் வேலைத் தரம் வெற்றியளிப்பதாக அமையவில்லை. பரிசோதனை அறிக்கையில் புலனாகிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை

எடுக்குமாறு வதிவிடப் பொறியியலாளர் ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தியபோதும், குறைபாட்டைத் திருத்துவதற்கு ஒப்பந்தகாரர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கான சான்று கணக்காய்விற்கு கிடைக்குமாறு செய்யப்படவில்லை.

### 3.4 பிரத்தியேக நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடாத கணணிச் செயற்பாட்டாளர் ஒருவருக்கும் சாரதி ஒருவருக்கும் மீளாய்வாண்டின்போது சம்பளமும் படியுமாக ரூபா 2.26 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கிடைக்குமாறு செய்யப்பட்ட தகவல்களின்படி, பரந்தன் - முல்லைத்தீவு வீதி புனரமைப்பு வேலைகள் 2013 டிசெம்பர் 21 ஆந் திகதியன்று முடிவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ரூபா 173.11 மில்லியன் மற்றும் ரூபா 37.76 என்பவற்றிற்க்கான 02 மாற்றக் கட்டளைகள் செயற்திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு மீளாய்வாண்டின்போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் செயற்திட்டப் பணிப்பாளரதும் வேண்டுகோளின் பேரில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 17 உத்தியோகத்தர்கள் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டு மாற்றக் கட்டளை மூலம் அவர்களுக்கு ரூபா 47.42 மில்லியன் ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது.

(ii) இதைவிட, செயற்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு மாற்றக் கட்டளை ஒன்றின் மூலம் சம்பளமும் படியுமாக அங்கீகாரம் எதுவுமின்றி ரூபா 9.66 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தகாரர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவுகளைத் தீர்த்து வைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் ஒப்பந்தங்களில் பொது நிபந்தனைகளது 14.8 ஆம் பிரிவின் பிரகாரம் 6 ஒப்பந்தங்களுக்கு ரூபா 29.16 மில்லியன் மேலதிகக் கட்டணமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது ரூபா 810,053 கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வவு செய்யப்பட்ட ஒரு கணனி, கணனித் துணைப்பாகங்கள், அலுவலகப் பாவனைப் பொருட்கள், டிஜிட்டல் கெமரா என்பவற்றை பிற நிறுவனங்கள் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் செயற்திட்டப் பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும், பதவியணிக்குப் புறம்பாக 3 உசாத்துணையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 1.62 மில்லியன் ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது. உசாத்துணையாளர்களது நியமன விதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் இந்த உசாத்துணையாளர்கள் செயற்திட்டத்திற்கு எவ்விதத்தில் உதவியாக அமைந்திருந்தனர் என்பதைக் கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது.